**வட மாகாண நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்திக்கான செயற்திட்ட வடிவமைப்பு முற்பணச் செயற்திட்டம் - 2020**

---

வட மாகாண நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்திக்கான செயற்திட்ட வடிவமைப்பு முற்பணச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2017 மார்ச் 17 ஆந் திகதிய PDA 6011-SRI ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையிலுள்ள 4.04 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்தரைகளுதம் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கடற்றொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் செயற்திட்ட அமுலாக்கல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. மீன்பிடித் தொழிலுக்கான உட்கட்டமைப்பின் நிலைபேறான பயன்பாட்டிற்காக மீன்பிடித் துறைமுகங்கள், நங்கூரமிடும் இடங்கள் மற்றும் தரையிறங்கும் தளங்களின் விரிவான வடிவமைப்பை மேற்கொள்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 267.79 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.59 மில்லியன் என்பதுடன் அதில் ரூபா 218.95 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.3 மில்லியன் *ஆசிய அபிவிருத்தி வங்கி* ஆல் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதமுள்ள தொகையான ரூபா 48.84 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 0.29 மில்லியன் இலங்கை அரசினால் நிதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2017 மார்ச் 20 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2018 யூன் 01 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. இருந்தபோதிலும் செயற்திட்டத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியானது 2020 மே 31 வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தைத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள் | தோகை | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | | |
| (அ) | அனைத்துக் கொடுப்பனவுகளிற்கும் உரிய உறுதிச்சீட்டுக்கள் 2021 செப்தெம்பர் 30 வரையிலும் கணக்காய்விற்றுச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 6.42 | பதிலளிக்கப் படவில்லை | கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய சான்று கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | வரிசை அமைச்சினாலும் செயற் திட்டத்தினாலும் பராமரிக்கப்ப டுகின்ற அறிக்கைகளிலுள்ள வெளிநாட்டுக் கடன் மீது ஏற்பட்ட செலவினங்களிற்கு இடையே வேறுபாடொன்று காணப்பட்டது. | 24.35 | பதிலளிக்கப் படவில்லை | பேரேட்டு மீதிகளை திறைசேரிப் பதிவேடு களுடன் கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண் டும். |
| (இ) | செயற்திட்டத்தின் நோக்கெல் லை மாற்றப்பட்டமையால் 2019 திசெம்பர் 31 வரை பேசாலை மீன்பிடி துறைமுகத்தின் நிர்மாணத்திற்கான மதியுரைச் சேவைகள் தொடர்பில் ஏற்பட் டிருந்த சிக்கனமற்ற செலவி னம் நிதிக் கூற்றுக்களிலுள்ள நடைமுறையல்லா சொத்துக்க ளின் கீழ் காண்பிக்கப்பட்டிரு ந்தது. | 18.6 | பதிலளிக்கப் படவில்லை | மீள்வடிவமைப்பின் நியா யப்படுத்தலை நிச்சயிப் பதற்காக மாற்றத்திற் கான காரணங்கள் புலனாய்வு செய்யப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 சனவரி 10 ஆந் திகதிய வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் தீர்மானம் | பருத்தித்துறை மீன்பிடி துறைமுகம் தொடர்பான சமூகத்தின் எதிர்ப்புக்கள் தீர்க்கப்படும் வரை அனைத்து செயற்திட்ட நடவடிக்கைகளையும் இடைநிறுத்த 2020 சனவரி 16 அன்று வெளிநாட்டு வளத் திணைக்களம் தீர்மானித்திருந்த போதிலும், மேற்படி துறை முகத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்ததாரரை தெரிவு செய்வதற்கான விலைமனுக்களை 2020 பெப்ரவரி 6 ஆம் திகதி அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை உட்பட மீளாய்வாண்டில் கொள்வனவுச் சபைக்கு ரூபா 418,358 செலுத்தப்பட்டமை என்பன முண்பாடுடைய செயற்பாடுகளாகும். | பதிலளிக்கப் படவில்லை | வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட உடன் படிக்கையின் நிர்வாக கையேட்டிலுள்ள 16 ஆம் பந்தி | அமைச்சின் உள்ளக கணக்காய்வின் நோக்கெல்லையில், செயற்திட்டத்தின் கணக்காய்வு உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தில் உள்ளக கணக்காய்வு எதுவும் செய்யப்படவில்லை. | பதிலளிக்கப் படவில்லை | அமைச்சின் உள்ளக கணக்காய்வின் நோக்கெல்லையில், செயற்திட்டத்தின் கணக்காய்வு உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட உடன்படிக்கையின் நிர்வாக கையேட்டிலுள்ள 66 ஆம் பந்தி | செயற்திட்ட உடன்படிக்கையின் நிர்வாக கையேட்டிலுள்ள 66 ஆம் பந்தியின் படி, செயற்திட்டத்தை பௌதீக ரீதியாக பூரண ப்படுத்திய பின்னர் ஆறு மாதங்களுக்குள், ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு, செயற்திட்ட நிறைவு | பதிலளிக்கப் படவில்லை | செயற்திட்டத்தை பௌதீக ரீதியாக பூரணப்படுத்திய பின்னர் ஆறு மாதங்களுக்குள், ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு, செயற்திட்ட நிறைவு அறிக்கையை அமைச்சு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | அறிக்கையை அமைச்சு சமர்ப்பிக்க வேண்டும், ஆனால் அத்தகைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமை குறித்து 2021 செப்டம்பர் 30 வரை கணக்காய்விற்கு அறிவிக்கப்படவில்லை. |

**3. பௌதீகச் செயலாற்றல்**

-----------------------------

**3.1 மேலதிக செயற்பாடுகள்/ செயற்திட்டததின் நோக்கங்களுக்கு புறம்பாக செய்யப்பட்ட கொடுப்பனவுகள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்மொழியப்பட்ட இரண்டு நிர்மாணத் தளங்களில் நிலவிய பொதுமக்களின் எதிர்ப்பை சரியாக இனங்காணாமையால், செயற்திட்டத்தின் திட்டங்களைத் தயாரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 220 மில்லியன், தொகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக மாறியிருந்தது. | பதிலளிக்கப் படவில்லை | மேற்படி இரண்டு இடங்களிலும் மீன்பிடி துறைமுகத்தை நிர்மாணிப் பதற்கான தீர்மானத்தை மேற்கொள்கையில் அங்கு நிலவிய பொதுமக்களின் எதிர்ப்பை செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் கருத்திற் கொண்டிருத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்திற்காக 2019 இல் ரூபா 741,582 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அலுவலக உபகரணங்களின் திகதி மற்றும் பெறுமதி உள்ளிட்ட பொருட்களின் பட்டியல் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், செயற்திட்டத்தை நிறைவு செய்த பின்னர், அலுவலக உபகரணங்களை கடற்றொழில் அமைச்சிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2021 ஒக்டோபர் 05 ஆம் திகதி வரையில் அது அமைச்சிடம் ஒப்படைக்கப்படவில்லை. | பதிலளிக்கப் படவில்லை | கொள்வனவு செய்யப்பட்டிருந்த அலுவலக உபகரணங்களின் திகதி மற்றும் பெறுமதி உள்ளிட்ட பொருட்களின் பட்டியல் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். செயற்திட்டத்தை நிறைவு செய்த பின்னர், அலுவலக உபகரணங்கள் கடற்றொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். |

**3.2 சர்ச்சைத் தன்மையானள விடயங்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நடவ டிக்கைகள் 2017 மார்ச் 20 ஆந் திகதி தொடங்கப்பட் டிருந்ததுடன் 2018 யூன் 01 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலி ட்டிருந்தது. இருந்தபோதிலும் செயற்திட்டத்தின் பணிகள் அமைச்சரவையின் அங்கீகா ரமின்றி கடன் வழங்கும் முகவரால் 2020 மே 31 வரையில் நீடிக்கப்பட்டிருந் தது. | பதிலளிக்கப் படவில்லை | மாற்றத்திற்கான காரண ங்கள் விசாரணை செய்யப் பட்டு சரியாக அறிவிக்கப் படுதல் வேண்டுமென்ப துடன் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | பேசாலை மற்றும் பருத்தித் துறையில் மீன்பிடித் துறைமு கங்களை நிர்மாணிப்பதற் கான வடிவமைப்பை இச் செயற்திட்டத்தின் செயற்பாடு கள் உள்ளடக்கியிருந்தன. எவ்வாறாயினும், பேசாலை யில் மீன்பிடித் துறைமுகத்தை வடிவமைத்தல் 2019 டிசம்பர் 31 வரை ரூபா 18.6 மில்லியன் செலவிடப்பட்ட பின்னர் செயற்திட்டத்தின் நோக்கெல்லை மாற்றியமை க்கப்பட்டமையால் 2019 இல் மீளப்பெறப்பட்டது. | பதிலளிக்கப் படவில்லை | மீள்வடிவமைப்பின் நியா யப்படுத்தலை நிச்சயிப் பதற்காக மாற்றத்திற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்பட வேண்டும். |